**தலைப்பு 262 – மாத்தறை மாவட்டச் செயலகம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 262 - மாத்தறை மாவட்டச் செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மாத்தறை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 11 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2023 மே 10 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினை தவிர்த்து, 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான மாத்தறை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ் அறிக்கை 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவே அன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் ஒன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன என வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் ஸிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் நிதி அல்லாத சொத்துக்கள் அசைவு அறிக்கை மற்றும் திறைசேரி படிவம் 82 இன் படி நிதி அல்லாத 12 சொத்துக்களின் கூட்டுத்தொகை ரூபா 192,042,786 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | ஒன்றித்த அறிக்கையை சரி செய்வதற்கு தேவையான தகவல்கள் திறைசேரியின் ஸிகாஸ் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளதுடன், 2023.12.31 திகதிக்கு முன்னர் சரி செய்வேன். | ஸிகாஸ் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் நிதிக் கூற்றுக்களில் சொத்துக்களின் பெறுமதி ஒன்றிற்கொன்று இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அட்டவணையின் படி ஹக்மனை பிரதேச செயலகத்தின் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 12,897,890 தொகையாக காணப்பட்ட போதிலும், கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஏஸீஏ – 06 படிவத்தின் படி ரூபா 128,968,940 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 116,071,050 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | தவறுதலாக நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் குறைவாக காட்டப்பட்டுள்ளதுடன், சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகத்தின் மீதிகள் இணக்கஞ் செய்யப்பட வேண்டும். |
| (iii) | சொத்துக்கள் அசைவு அறிக்கையின் படி கைதவிர்ப்பு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் புதிதாக சேர்க்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதி முறையே 9,139,125 தொகை மற்றும் ரூபா 460,199,179 தொகையாக காணப்பட்டது. ஸிகாஸ் சொத்துக்கள் பதிவேட்டின் படி அப்பெறுமதிகள் முறையே ரூபா 9,836,490 தொகை மற்றும் ரூபா 518,033,053 தொகையாக காணப்பட்டமையால் முறையே ரூபா 697,365 இற்கான மற்றும் ரூபா 57,833,874 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | 2023.12.31 திகதிக்கு முன்னர் சரி செய்வதற்கு அறிவிக்கின்றேன். | கைதவிர்ப்பு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் புதிதாக சேர்க்கப்பட்ட பெறுமதி சரியாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

(ஆ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மாவட்ட செயலகத்திற்குரிய 57 வாகனங்களுக்காக 2022 ஜூலை 06 திகதி ரூபா 845,109 இற்கான செலவொன்று மேற்கொண்டு முழுமையான காப்புறுதி உள்ளடக்கமொன்று பெற்றிருந்த போதிலும், காப்புறுதி உடன்படிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்த வருடம் பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளும் போது இது தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது என அறிவிக்கின்றேன். | காப்புறுதி உடன்படிக்கை பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளளது.

| அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை | | |
| 2009 ஏப்ரல் 16 திகதிய 09/2009 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்ககையின் பந்தி IV | விரல் அடையாள பதிவு இயந்திரத்தின் மூலம் கடமையாற்றிய காலத்தை உறுதிப்படுத்தாமல் 03 பிரதேச செயலகங்களின் 09 உத்தியோகத்தர்களுக்கு 2022 ஜனவரி முதல் ஒக்தோபர் வரை கூட்டுத்தொகை ரூபா 629,139 தொகை விடுமுறை நாள் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. | ஹக்மனை, பிடபெத்தர மற்றும் பஸ்கொட பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்கள் விடுமுறை நாட் சம்பளம் பெற்றுக்கொள்ளும் போது குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுவதற்கு பொறுப்பாக இருப்பேன் என அறிவிக்கின்றேன். | பொது நிருவாக சுற்றறிக்கை முரணாக செலுத்தப்பட்டிருந்த விடுமுறை நாட் சம்பளத்தினை திருப்பி அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த நலன்கள்(Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஹக்மனை பிரதேச செயலகப் பிரிவில் வீட்டுப் பொருளாதார மற்றும் போசனையை மேம்படுத்தி, குடும்ப அலகுகளை வலிமையூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 459,000 தொகை செலவிடப்பட்டு 102 நலன் பெறுவோருக்கு 10 கோழிக் குஞ்சுகள் வீதம் வழங்கப்பட்டிருந்தது. கோழிக் குஞ்சிகளின் பாதுகாப்பு தொடர்பாக தேடிப் பார்த்து செயற்படாமை | கோழிக் குஞ்சுகளுக்கு வைரஸ் நோய் ஏற்பட்டிருந்தமை மற்றும் மிருகங்களினால் சேதப்படுத்தபட்டிருந்த காரணத்தினால் மொத்தக் கோழிக் குஞ்சுகளும் நலன் பெறுவோரிடம் காணப்படவில்லை என அறிவிக்கின்றேன். | செயற்திட்டங்கள் முறையான ஆய்வொன்றின் பின்னர் ஆரம்பித்தல் மற்றும் செயற்திட்டம் ஆரம்பித்த பின்னர முறைப்பிரகாரம் தொடர் நடவடிக்கை எடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் செயற்திட்டம் தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்காமையால் கோழிக் குஞ்சுகள் இறந்திருந்தமையால் செயற்திட்டம் முழுமையாக தோல்வியடைந்திருந்ததுடன், மேற்கொள்ளப்பட்ட செலவு பலனற்றதாகியிருந்தது. | | |
| (ஆ) | தேசிய விவசாய வீட்டுத் தோட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஹக்மனை பிரதேச செயலக அதிகார பிரதேசத்தில் 34 பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட மரக்கறி வகைகளில் ஒரு வகை வீதம் பொதி செய்து வழங்குவதற்காக 30 நாற்றுமேடைக்காரர்களுக்கு ரூபா 862,470 தொகை செலுத்தப்பட்டிருந்தது. முறையான திட்டமொன்று மற்றும் தொடர் நடவடிக்கை செய்முறையொன்று கடைபிடிக்கப்படாமையின் காரணமாக செயற்திட்டம் முழுமையாக தோழ்வியடைந்திருந்தது. | கொவிட் நிலைமை மற்றும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக நாற்றுமேடை தோல்விடைந்திருந்த போதிலும், இடையிடையே இது தொடர்பாக அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டு மீண்டும் நாற்றுமேடை ஆரம்பிக்கப்பட்டு பேணிச் செல்வதற்காக அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். | செயற்திட்டங்கள் முறையான ஆய்வொன்றின் பின்னர் ஆரம்பித்தல் மற்றும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் முறைப்பிரகாரம் தொடர் நடவடிக்கை எடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 2 இலட்சம் சமூர்த்தி குடும்பங்களை மையப்படுத்தி முழுமையான வீட்டுக் குடியிருப்புப் பொருளாதார வளர்ச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வெலிப்பிடிய பிரதேச செயலகப் பிரிவில் 198 நலன் பெறுவோருக்கு வர்த்தக உபகரணங்கள், கருவாக் கன்றுகள் மற்றும் தேயிலைச் செடிகள் வழங்கப்பட்டிருந்தன. 2022 நவம்பர் 24 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது கருவாக் கன்றுகளை பெற்றிருந்த நலன்பெறுவோர் பயிரச்செய்கையை உரிய முறையில் பராமரித்திருக்கவில்லை. 2 சமூர்த்தி பிரிவுகளில் நலன் பெறுவோர் இருவருக்கு வழங்கியிருந்த 02 பலசரக்கு அரைக்கும் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. முறையான பகுப்பாய்வொன்று இன்றி நலன்பெறுவோர் தெரிவு செய்யப்பட்டிருந்தமையால் எதிர்பார்த்த குறிக்கோள்கள் | ஜயவிக்ரமபுர வலயத்தில் பெரலேலிய பிரிவில் கருவாக் கன்றுகள் பெற்றிருந்த நலன்பெறுவோரை அறிவுருத்தி உரிய முறையில் கருவாக் கன்றுகளை பேணிச் செல்வதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது எனவும், 02 பலசரக்கு அரைக்கும் இயந்திரங்களுக்குரிய செயற்திட்டம் விரைவாக ஆரம்பிக்க முடியாமல் போனது கொவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக என அறிவிக்கின்றேன். | செயற்திட்டங்கள் முறையான ஆய்வின் பின்னர் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | சௌபாக்கிய உற்பத்திக் கிராமங்கள் செயற்திட்டங்களின் கீழ் வெலிகம பிரதேச செயலகத்தினால் 02 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் உள்ளடங்கக்கூடியவாறு ரூபா 586,000 தொகை செலவிடப்பட்டு 27 நலன் பெறுபவர்களுக்கு வழங்கியிருந்த 1465 கோழிக் குஞ்சுகள் இறந்தமையால் செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியுடன் பணமின்மையால் கோழிக் குஞ்சுகளுக்கு உணவு வழங்குவதன் மூலம் அவர்களின் பொருளாதாரத்திற்கு மேலதிக செலவுப் பொறுப்பொன்று ஏற்படுவதற்கு நேரிட்டிருந்தது என அறிவிக்கின்றேன். | முறையான ஆய்வொன்றின் பின்னர் செயற்திட்டங்கள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | சௌபாக்கிய உற்பத்திக் கிராமங்கள் செயற்திட்டத்தின் கீழ் ஹக்மனை பிரதேச செயலகப் பிரிவின் கிராம உத்தியோகத்தர் பிரிவொன்றில் 20 நலன்பெறுவோருக்காக ரூபா 301,423 இற்கான அரச பங்களிப்பின் கீழ் வழங்கியிருந்த பழச் செடிகள் விலங்குகளினால் சேதப்படுத்தப்பட்டிருந்தன. நலன் பெறுவோருக்கு வழங்கியிருந்த 02 மோட்டார் பம்புகள், 05 தாச்சிகள், 04 வில்பரோக்கள், 03 மண்வெட்டிகள், அலவாங்கு, நீர்ஊற்றும் வாளி, நீர்க் குழாய்கள் மற்றும் நீர்த் தொட்டி ஆகிய உபகரணங்கள் பயன்படுத்தப்படாமல் வீடுகளில் வைக்கப்பட்டிருந்தன. கிராம உத்தியோகத்தர் பிரிவொன்றில் வெற்றிலை, அன்னாசி, பலகார உற்பத்திக்காக 72 நலன் பெறுவோருக்கு ரூபா 12,018,299 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் பயிர்ச் செய்கைகள் அழிவடைதல், உற்பத்தியை விற்பனை செய்வதில் சிரமங்களின் காரணமாக செயற்திட்டங்கள் தோல்வியடைந்திருந்ததுடன், இந்த செயற்திட்டங்கள் தொடர்பாக பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தொடர் நடவடிக்கை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நலன் பெறுவோரினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கன்றுகள் வன விலங்குகளின் சேதம் மற்றும் பப்பாளி மரங்களில் ஏற்பட்டிருந்த நோய் காரணமாக பயிர்ச்செய்கை அழிவடைதல், வழங்கியிருந்த உபகரணங்கள் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டதுடன், வெற்றிலைகள் மற்றும் அன்தூரிய உற்பத்தி செயற்திட்டங்கள் கொவிட் தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமையினால் பின்னடைவு ஏற்பட்டிருந்ததெனவும், பலகார உற்பத்திச் செயற்திட்டம் நாட்டின் பொருளாதார நிலைமையினால் பின்னடைவு ஏற்பட்டிருந்தெனவும் காணக்கூடியதாக உள்ளது எனவும் மற்றும் பத்திக் உற்பத்திச் செயற்திட்டத்திற்காக பயிற்சி வழங்கல் நிகழ்ச்சித் திட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டதென அறிவிக்கின்றேன். | செயற்திட்டங்கள் தொடர்பாக முறையான ஆய்வொன்று மேற்கொண்டு ஆரம்பித்தல் மற்றும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் முறைப்பிரகாரம் தொடர் நடவடிக்கை எடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2016 – 2021 இடைப்பட்ட காலத்தில் விளையாட்டுத்துறை அமைச்சிலிருந்தும் விளையாட்டுத்துறை திணைக்களத்திலிருந்தும் பிடபெத்தர பிரதேச செயலகத்திற்கு மற்றும் மாவட்ட செயலகத்திற்கு கிடைத்திருந்த ஏற்பாடுகள் ரூபா 9,149,964 தொகை செலவிடப்பட்டு 04 கரப்பந்தாட்ட விளையாட்டுத் திடல்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், அந்த விளையாட்டுத் திடல்களில் ரூபா 6,823,091 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 03 விளையாட்டுத் திடல்கள் கணக்காய்வுத் திகதியாகிய 2023 ஜனவரி 25 திகதி அளவிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | விளையாட்டுத்துறை அமைச்சிலிருந்து மற்றும் விளையாட்டுத்துறை திணைக்களத்திலிருந்து கிடைத்திருந்த ஏற்பாடுகள் மீது நிர்மாணிக்கப்பட்டிருந்த இந்த விளையாட்டுத் திடல்கள் பயன்படுத்தப்படாமை தொடர்பாக பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபைக்கு அறிவுருத்தப்பட்டதென அறிவிக்கின்றேன். | அரச ஏற்பாடுகள் திட்டமிடப்பட்டு செயற்திறனுள்ள விடயங்களுக்கு மாத்திரம் செலவிடப்பட வேண்டும். |

**3.2 முகாமைத்துவம் பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிடபெத்தர பிரதேச செயலகத்தைச் சேர்ந்த 49 வெளிக்கல உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது விடுமுறை நாள் சம்பளம் மற்றும் பிரயாணச் செலவு ரூபா 1,251,121 தொகை செலுத்தியிருந்த போதிலும், வெளிக்களத்தில் நிறைவேற்றிய கடமைகள் தொடர்பாக முறையான அறிக்கைகள் பேணிச் சென்றிருக்கவில்லை. | வெளிக்கல உத்தியோகத்தர்களின் பிரிவு ஒன்றுகூடல் தினத்தன்று கடந்த மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட விஷேட நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான முன்னேற்றம் சமர்ப்பிக்கப்படுகின்றது எனவும், நாளாந்தம் உத்தியோகத்தர்கள் வெளிக்களத்தில் மேற்கொள்ளும் விஷேட நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கடமைகள் தொடர்பாக அலுவலகத்தின் வட்ஸ்அப் குழுமத்தில் தரவுகள் மற்றும் படங்கள் அனுப்பப்படுகின்றது என அறிவிக்கின்றேன். | முறைப் பிரகாரம் அறிக்கைகள் பேணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கையில் ஏழ்மையை ஒழிக்கும் குறிக்கோளுடன் கிராம சக்தி மக்கள் செயற்திட்டம் தொடர்பாக 16 பிரதேச செயலகங்களில் இருந்து தகவல்கள் அழைக்கப்பட்டன. 2023 மார்ச் 24 திகதி அளவில் கணக்காய்வு கிடைக்கப்பெற்ற 12 பிரதேச செயலகங்களுக்குரிய பதிவு செய்யப்பட்ட 146 கிராம சக்தி மக்கள் சங்கங்களில் இருந்து 2022 திசெம்பர் 31 அளவில் 99 மக்கள் சங்கங்கள் செயற்படா மட்டத்தில் காணப்பட்டது. அந்த சங்கங்களில் ரூபா 36,293,148 இற்கான வைப்புத் தொகையும், செயற்படு மட்டத்தில் காணப்பட்ட 47 சங்கங்களின் வைப்புக்கள் என ரூபா 23,906,661 தொகையும் உட்பட மொத்தம் ரூபா 60,199,809 இற்கான மீதியொன்று அரச வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், செயற்திட்டங்களின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டிருந்தமையால் அந்த பணம் விளைவற்று காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. | செயற்படு மட்டத்தில் காணப்படாத கிராம சக்தி மக்கள் சங்கங்களில் காணப்படும் பணத்தை மீண்டும் உரித்தாக்கும் படி செளபாக்கிய பணியகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். | செயற்படாத சங்கங்களில் காணப்படும் பணத்தை விரைவாக உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச செயலகம் ஒன்றில் மூன்றாம் மட்ட பதவியொன்றை சேர்ந்த ஒரு உத்தியோகத்தரும், மாவட்ட செயலகத்தின் மற்றும் பிரதேச செயலகங்களில் இரண்டாம் மட்ட உத்தியோகத்தர் பதவிகளில் 460 உத்தியோகத்தர்களும் ஆரம்ப மட்ட பதவியொன்றில் ஒரு ஊழியருமாக மொத்தம் 462 உத்தியோகத்தர்கள் முறைப் பிரகாரம் அங்கீகரிக்கப்படாமல் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | மிகை ஏற்பட்டிருந்தது பட்டதாரிகள் அரச சேவைக்கு சேர்க்கப்பட்ட காரணத்தினாலேயே ஆகும். எதிர் காலத்தில் இதற்கான நடவடிக்கை அமைச்சு மட்டத்தில் எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | மிகையினை சமப்படுத்திக்கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பொது நிர்வாகச் செயலாளரின் இலக்கம் 02/2018 கொண்ட மற்றும் 2018 ஜனவரி 24 திகதிய சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன், ஒட்டுமொத்த பதவியணிக்குமாக மேற்கூறிய சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கைகள் கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. | தேசிய பாதிட்டு சுற்றறிக்கை இலக்கம் 01/2023 மூலம் செலவுகள் முகாமைத்துவம் செய்யப்பட்டிருந்தமையால் மனிதவள அபிவிருத்திக்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்படல் வரையறுக்கப்பட்டிருந்தது. அதற்கான உடன்படிக்கைகள் கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை என அறிவிக்கின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |